**கொபெய்கனே பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 22 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கொபெய்கனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொபெய்கனே சிறுவர் பூங்காவில் ரூபா. 2,559,755 பெறுமதியான நிர்மாணிப்புகள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த கடையின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 03 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்பான பயன்பாட்டுப் பேரேடுகளில் காணப்பட்ட மீதிகளுக்கிடையில் ரூபா. 407,755 இணக்கமின்மை காணப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா. 34,995,252 பெறுமதியான பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா. 21,094,287 பெறுமதியான செலுத்த வேண்டிய மீதிகளில் ரூபா. 3,224,994 ஒரு வருடத்திற்கும் மேலான காலத்திலிருந்து தீர்க்கப்படாத மீதிகளாகக் காணப்பட்டன.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல ஆதாரங்கள் காணப்படாமை**

அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா. 3,881,071 கூட்டுப்பெறுமதியான தளபாடங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் பரிசீலிக்க முடியாது போனது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | |
| (i) 3.4.3 (இ) வழிகாட்டி | 219,000 | சந்தை விலை நிர்ணய முறையின் கீழ் விலைமனுக் கோரலின் போது பதிவு செய்யப்படாத நிறுவனங்களிலிருந்தும் விலைமனுக் கோரப்பட்டிருந்தது. |
| (ii) 6.2.2 வழிகாட்டி | | 03 வாகனங்கள் மற்றும் 01 இயந்திரம் ஆகியவற்றை திருத்தியமைப்பதற்கான விலைமனுக் கோரலின்போது தேசிய போட்டியடிப்படையிலான விலைமனுக் கோரலின் குறைந்தபட்ச காலத்தின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 9,270,532 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,920,871 ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | -------------- | ---------------- | ---------------- | --------------- | -------------- | -------------- | -------------- | -------------- |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 805 | 1,110 | 1,063 | 263 | 1,214 | 898 | 506 | 215 |
| (ii) | வாடகை | 3,245 | 3,572 | 3,577 | 8 | 1,251 | 1,376 | 1,393 | 14 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,026 | 1,046 | 1,046 | - | 670 | 1,174 | 1,174 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 42,530 | 50,419 | 44,625 | 25,888 | 41,039 | 44,840 | 46,985 | 12,295 |
| | மொத்தம் | 47,606 | 56,147 | 50,311 | 26,159 | 44,174 | 48,288 | 50,058 | 12,524 |

**குறிப்பு**
**----------**

மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 12 மில்லியன் வருமானத்தில் சேகரிக்கப்பட்ட ரூபா 10 மில்லியன் மீளாய்வாண்டிள் சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் அடங்கியிருந்தது.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

-----------------------------------------------------------------------

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா. 56 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய வருடங்களின் நிலுவை வருமானம் ரூபா. 10 மில்லியனுடன் ரூபா 50 மில்லியன் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது. ரூபா 65.5 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 துிகதியில் உள்ளவாறு ரூபா. 12 மில்லியனாகவிருந்த நிலுவை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 துிகதியில் உள்ளவாறு ரூபா. 26 மில்லியனாகவிருந்தது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

------------------------------------

ரூபா. 215,312 ஆகவிருந்த ஆரம்ப நிலுவையில் மீளாய்வாண்டில் ரூபா. 51,739 அறவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீத வரி மற்றும் ஏக்கர் வரி நிலுவை ரூபா. 262,801 ஆகவிருந்தது.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

--------------------------------------------------

2017 ஆம் ஆண்டில் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக 535 வியாபார நிறைுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டிருந்த போதும், அவற்றில் 300 மாத்திரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இவற்றில் 77 மாத்திரம் அனுமதிப்பத்திரத்திற்கான பரிந்துரை வழங்கப்பட்டிருந்ததுடன், சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் 458 வியாபார நிறுவனங்கள் அனுமதிப்பத்திரமின்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,983,802 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,429,800 ஆகவிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவிற்கமைவாக 30 பிரதான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக உப விதிகள் உருவாக்கப்பட வேண்டியிருந்த போதும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வரை 07 செயற்பாடுகளுக்காக மாத்திரம் உப விதிகள் உருவாக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபைக்குச் சொந்தமான திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா. 718,465 செலவிடப்பட்டிருந்த போதும் நிலைய வளாகத்தில் உக்கக்கூடிய கழிவுகள் குவியலாகக் காணப்பட்டதுடன் ஊழியர் பற்றாக்குறை காரணமாக கேள்விக்கு ஏற்றவாறான கொம்போஸ்ட் உரத்தினை உற்பத்தி செய்வதற்கு சபைக்கு முடியாது போயிருந்தது.

(ii) உக்காத கழிவுகளை பதப்படுத்துவதற்கான பேல் இயந்திரம் காணப்படாமை காரணமாக ஊழியர்களின் மூலம் கைகளினால் இப்பதப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அது போதிய தரத்தில் அமைந்திருக்கவில்லை. மேலும் உக்காத கழிவுகளில் ஒரு பகுதி தினந்தோறும் நிலைய வளாகத்தில் புதைக்கப்பட்டும் வந்திருந்தது.

#### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலுக்கமைவாக வறுமையை ஒழிப்பதற்கான வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைத் திட்டங்கள், சுகாதார மற்றும் உடல் நல விருத்திக்கான பெண்கள் மற்றும் குழந்தை பாதுகாப்பு சேவை திட்டங்கள், நோய்த் தடுப்பு வேலைத்திட்டங்கள், பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், விளையாட்டு மற்றும் இளைஞர் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் ஆயர்வேத வைத்திய முகாம்கள், அடிப்படை வசதிகள் அபிவிருத்திக்கான நிர்மாணிப்புகள், வீதிப் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கழிவு முகாமைத்துவ நிலையத்திற்குச் சொந்தமான இயந்திர உபகரணங்கள், காரியாலய உபகரணங்கள் உள்ளிட்ட சொத்துகளுக்கான பொருட்பதிவேடு, கொம்போஸ்ட் உற்பத்தி தொடர்பான இருப்புக் கையேடு மற்றும் ஹோல்சிம் நிறுவனத்திற்கு பொருட்கள் விநியோகிக்கும் கையேடு ஆகியன நிலையத்தினால் பராமரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான ஒரு கப் வண்டி 2014 மார்ச் மாதம் 27 திகதியில் உள்ளவாறு ரூபா. 1,276,600 செலவிடப்பட்டு என்ஜின் திருத்தியமைக்கப்பட்டு 50,000 கிலோமீற்றர் ஓடிய நிலையில் 2015 ஆகஸ்ட் மாதம் 10 திகதியில் உள்ளவாறு என்ஜின் செயலிழந்துள்ளது. 2018 மார்ச் 09 திகதியில் உள்ளவாறு வரை வாகனத்தை திருத்தியமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் வெளி நிறுவனங்களிலிருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் செயற்பாட்டு அணித்தியாலங்கள் தொடர்பான விபரங்கள் பேணப்படாததன் காரணமாக அந்நிறுவனங்களின் மூலம் கோரப்பட்டிருந்த ரூபா. 2,287,606 இனை செலுத்த முடியாமலிருந்தது.

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒன்று ரூபா. 126,000 வீதம் 05 நடமாடும் வியாபாரக் கூடங்கள் சபைக்கு கிடைத்திருந்ததுடன், செயற்றிட்ட அறிக்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் மாதத்தினுள் வியாபாரக் கூடங்களைப் பொருத்தமான இடங்களில் அமைத்து வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாகக் கூறப்பட்ட போதும், 2018 மார்ச் மாதம் வரையிலும் பயன்பெறுநர்களை இனங்கண்டு குறித்த நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

போட்டி நிறைந்த அரச நிதி நிறுவனங்களிடமிருந்து வட்டி சம்பந்தமான விளக்கங்கள் கோரப்படாமல் மாதாந்த வட்டியினைப் பெற்று வருடாந்தம் 7.2 வீத வட்டி அடிப்படையில் அரச வர்த்தக வங்கியொன்றில் ரூபா. 2,500,000 நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.5 பெறுகைகள்

#### 3.5.1 பெறுகைத் திட்டம்

சபையினால் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 வழங்கல் மற்றும் சேவைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னரங்கு அலுவலகத்திற்கான உபகரணங்கள் கொள்வனவின் போது விலைமனுக் கோரல், பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் விதிமுறைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் விலைமனு கோரப்படாது ரூபா. 161,000 பெறுமதியான 04 டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) வழங்கல்/சேவைகளுக்காக விலைமனுக் கோரல் தொடக்கம் வழங்குனரைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் வரையிலான பெறுகைகள் செயன்முறையில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டன.

(ஈ) 03 கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் முகாமைத்துவக் குழுவின் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதும் சபையினால் ரூபா. 638,330 செலவில் 08 கணனிகள், 08 யுபீஎஸ்கள் மற்றும் 08 வைரஸ் அட்டைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

3.5.3 **ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரலுவெவ பாலர் பாடசாலைக்காக கழிவறைத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் பணியின் 18 வேலைத் தலைப்புகளுக்காக ரூபா. 114,595 ஒப்பந்தத் தொகைக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இஹல லோலங்வெவ ஊடாக பானவ வீதிக்கு கொங்ரீட் இடும் பணியின் வேலைத் தலைப்புகளின் கீழ் ரூபா. 344,378 செலுத்தப்பட்டிருந்த போதும், கொங்ரீட் மேற்பரப்பு சம்பூரணமாகக் கழன்று கற்களும் மணலும் வெளியாவதை அவதானிக்க முடிந்தது.

(இ) பொரலுவெவ நூலகப் புனரமைப்புப் பணியின் சுவர்களுக்கான நிறப்பூச்சு முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்காத நிலையில் ரூபா. 184,525 ஆன மொத்தக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2017 ஆம் ஆண்டில் ரூபா. 1,156,092 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கிணற்றிலிருந்து நீர் இணைப்பினைப் பெற்றுக் கொடுப்பதுடன் தொடர்பான குழாய்கள் பொருத்துதல் மற்றும் நீர்ப் பம்பி பொருத்துதல் 2018 மார்ச் 16 திகதியில் உள்ளவாறு வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

14 செலவுத் தலைப்புகளுடன் தொடர்பான தேறிய நிதி ஒதுக்கீட்டில் 38 தொடக்கம் 100 வீதம் வரையிலான சேமிப்பு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று அமைக்கப்பட்டு 03 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதும், உத்தியோகத்தர்களுக்கு கணக்காய்வு நடவடிக்கைகளுக்குப் புறம்பாக வேறு வேலைகளும் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்க அனுப்பி வைக்கப்படவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் கீழ்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

| **முறைமைகள்** | | **குறைபாடுகள்** | |
| --- | --- | --- | --- |
| (அ) | கணக்கீட்டுச் செயற்பாடு | (i) | நிலையான சொத்துக்கள் கணக்கிடப்படாமை |
| | | (ii) | கணக்குகளில் பதிவு செய்தலில் வழுக்கள் காணப்பட்டமை |
| | | (i) | பாதுகாப்பை உறுதி செய்யாமை |
| (ஆ) | சொத்துக்கள் | (ii) | முறையாகப் பராமரிக்காமை |
| (இ) | வருமான நிர்வாகம் | | நிலுவை வருமானங்களை அறவிடுவதில் குறைபாடுகள் காணப்பட்டமை |
| (ஈ) | செயற்திட்டங்கள்/ஒப்பந்தங்கள் | (i) | போதிய கண்காணிப்பு இல்லாமை |
| | | (ii) | மதிப்பீடு செய்வதில் உள்ள குறைபாடுகள் |